**செய்தி வெளியீடு எண்: 858** **நாள்: 24.11.2018**

**செய்தி வெளியீடு**

"கஜா" புயல் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கடலூர், திண்டுக்கல், சிவகங்கை, கரூர், திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட மாவட்டங்களில் வரலாறு காணாத பாதிப்புகளை ஏற்படுத்தியது. வாழ்வாதாரங்களை இழந்த மக்களுக்கு உதவிடவும், நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 19.11.2018 அன்று பத்திரிகைகளின் வாயிலாக நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் வேண்டுகோளினை ஏற்று, தமிழ்நாட்டில் "கஜா" புயலால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்பு பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நிதியுதவி வழங்கியவர்களின் விவரங்கள்.

- 19.11.2018 அன்று நாங்குநேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள் 25 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- 20.11.2018 அன்று டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்தின் தலைவர் திரு.வேணு சீனிவாசன் அவர்கள் 2 கோடி ரூபாய்க்கான காசோலை.
- சிட்டி யூனியன் வங்கியின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமை செயல் அலுவலர் டாக்டர் என். காமகோடி அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான வங்கி வரைவோலை.
- சக்தி மசாலா நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.பி.சி. துரைசாமி மற்றும் இயக்குநர் திருமதி டி. சாந்தி ஆகியோர் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- 21.11.2018 அன்று தி.மு.க. பொருளாளர் திரு.துரைமுருகன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- லைக்கா நிறுவனத்தின் சார்பில் 1 கோடியே 1 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வேந்தர் திரு.ஏ.சி. சண்முகம் அவர்கள் 20 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- திரைப்பட நடிகர் திரு.அஜித் குமார் சார்பில் 15 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் 23.11.2018 அன்று தலைமைச் செயலகத்தில் கீழ்க்கண்டவர்கள் நிதியுதவி வழங்கினார்கள்.

- வேலம்மாள் கல்வி அறக்கட்டளையின் தலைவர் திரு.எம்.வி. முத்துராமலிங்கம் அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.

- ❖ எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகத்தின் வேந்தர் திரு. டி.ஆர். பச்சமுத்து அவர்கள், எஸ்.ஆர்.எம். குழுமத்தின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- ❖ தென்னிந்திய சர்க்கரை ஆலை சங்கங்களின் தலைவரும், தரணி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவருமான டாக்டர் பழனி ஜி. பெரியசாமி, ஆரூரான் சர்க்கரை நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ராம் வி. தியாகராஜன், ஈ.ஐ.டி. பாரி இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் திரு.வி. ரவிச்சந்திரன், ஈரோடு–பொன்னி சர்க்கரை நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.என். இராமநாதன், சக்தி சர்க்கரை நிறுவனத்தின் இயக்குநர் திரு.எம். ஹரிஹர சுதன், ராஜஸ்ரீ சுகர்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.ஜி. சத்தியமூர்த்தி, தனலட்சுமி ஸ்ரீனிவாசன் சுகர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஆகியோர் தென்னிந்திய சர்க்கரை ஆலை சங்கங்களின் சார்பில் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- ❖ ராம்கோ குழும நிறுவனத்தின் தலைவர் திரு.பி.ஆர். வெங்கட்ராமா ராஜா மற்றும் தலைமை செயல் அலுவலர் திரு.ஏ.வி. தர்மகிருஷ்ணன் ஆகியோர் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- ❖ The Legend சரவணா ஸ்டோர்ஸ் நிறுவனத்தின் தலைவர் திரு.லெஜண்ட் சரவணன் அவர்கள் 1 கோடி ரூபாய்க்கான காசோலை.
- ❖ சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், மதுரை புறநகர் மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திரு.தொல். திருமாவளவன் அவர்கள் 10 லட்சம் ரூபாய்க்கான காசோலை.
- ❖ திரைப்பட நடிகர் திரு.விவேக் அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் இன்று (24.11.2018) GRT குழும நிறுவனங்களின் மேலாண்மை இயக்குநர்கள் திரு.ஜி.ஆர். அனந்தபத்மநாபன் மற்றும் திரு.ஜி.ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோர் 50 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள்.

அத்துடன், பொதுமக்களும் நேரடியாகவும், ஆன்–லைன் மூலமாகவும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கிய நன்கொடைகளை சேர்த்து, இதுவரை வழங்கப்பட்ட தொகை 13 கோடியே 32 லட்சத்து 67 ஆயிரத்து 288 ரூபாயாகும்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**